# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/9 - 2020 ජනවාරි මස 07 වැනි අඟහරුවාදා - 2020.01.07

*2157/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (xvi) (A)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சொல்லப்பட்ட சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.*

கொழும்பு.

*கட்டளைச் சட்டம்*

1. இக்கட்டளைச் சட்டம் 2020 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, திறந்த பல்கலைக்கழக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு மே மாதம் 8 ஆந் திகதிய 2122/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1990 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதிய 591/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கைத் திறந்த பல்கலைக்கழக கட்டளைச் சட்டமானது, அதன் 16 ஆம் பந்தியில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-


1A - PG 4841 — 127 (2020/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*(1)* அதன் *(2)* ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"*(2)* மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் பின்வரும் கற்கைத் துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) சட்டக் கற்கைகள் ;

(ii) மொழிக் கற்கைகள் ;

(iii) சமூகக் கற்கைகள் ; அத்துடன்

(iv) ஆங்கில மொழியைக் கற்பித்தல்." ;

*(2)* அதன் *(3)* ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"*(3)* இயற்கை விஞ்ஞான பீடம் பின்வரும் கற்கைத் துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) தாவரவியல் ;

(ii) இரசாயனவியல் ;

(iii) கணிதம் ;

(iv) கணினி விஞ்ஞானம் ;

(v) பௌதிகம் ; அத்துடன்

(vi) விலங்கியல்." ;

*(3)* அதன் (5) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(5) கல்விப் பீடம் பின்வரும் கற்கைத் துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி ;

(ii) முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வி ;

(iii) விசேட தேவைகள் கல்வி ; அத்துடன்

(iv) கல்விசார் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம்." ;

*01-555*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.